Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.169/2020 Date: 11.08.2025
Deposition of witness for prosecution: PW10 ( LW10)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | முருகன் | Village | கம்பம் |
| Father/ Husband Name | அய்யாகண்ணு | Taluk | உத்தமபாளையம் |
| Age | 73/2025 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 11.08.2025 TIME 12.40 **PM**

1–வது எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

வழக்கு விபரம் எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் எதுவும் நான் கையொப்பம் செய்யவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 18.05.2020–ம் தேதி நானும், பெரியசாமி என்பவரும் அவரது டீ கடையில் இருந்த போது, கம்பம் வடக்கு போலிசார் கொல்லை வழக்கு சம்மந்தமாக சையது முகமது என்பவரை காவல்நிலைய விசாரணைக்கு எடுத்து, விசாரிக்க உதவியாக இருக்கும் படி கேட்டுக்கொண்தன் பெயரில் நாங்கள் காவல்நிலையம் சென்று எங்கள் முன்னிலையில் எதிரி சையது முகமது என்பவர் தானாக முன்வந்து, எவ்வித வற்புறுத்தலோயின்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து, எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்று அதன் பின்னர் கம்பம் மெட்டு ரோடு ஆன்ஸ் பள்ளி அருகே முகமது இர்பானுக்கு சொந்தமான மஞ்சள் நிற பாஜாஜ் பல்சர் RX 200 இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டி, கம்பம்மெட்டு ரோடு மலை அடிவாரம் சென்று செட்டில்கார்க் கிரவுண்ட் பக்கம் உள்ள புதரில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த உருட்டு கம்பையும் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், அதன் பின்னர் கம்பம் மெட்டு ரோட்டில் கவுண்டர் சுடுகாட்டிற்கு வந்து தென் மேற்கில் உள்ள புளியமரத்திற்கு கீழ் பூமிக்குள் புதைத்திருந்த பிளாஸ்டிக் பையை எடுத்து மேலும் சிலுவை கோயில் அருகே உள்ள செலவு செய்த பணத்தில் மீது ரூ.500 பணத்தை எடுத்து ஆஜர் செய்து அதனையும், அத்தாட்சி எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார் என்றும், நாங்கள் அதில் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
ஓம்/திரு.P. காமராசு
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.169/2020 Date: 11.08.2025
Deposition of witness for prosecution: PW11 ( LW12)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. அருண் | Village | ஓடைப்பட்டி |
| Father/ Husband Name | நெடுஞ்செழியன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 35/2025 | Calling | தலைமை காவலர் 2212 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 11.08.2025 TIME 01.20 **PM**

1-வது எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது ஹைவேவிஸ் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.05.2020-ம்தேதி கம்பம் வடக்கு காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்த போது கம்பம்- கம்பம் மெட்டு ரோடு முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் அருகே உள்ள IOB ATM முன்பு சந்தேகம் படியான இருசக்கரவாகனம் நின்றுக்கொண்டிருந்ததாக காவல் ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பெயரில் நானும், என்னுடன் காவலர் திரு. மணிமுத்து இருவரும் மேற்படி இடத்திற்கு சென்று பார்த்த போது, பதிவு எண் பலகை இல்லாமல் மஞ்சள் நிற பஜாஜ் பல்சர் RS 200 இருசக்கர வாகனம் நின்று கொண்டிருந்தது, மேற்படி வாகனத்தின் டேங் கவரை பிரித்து பார்த்தபோது மேற்படி வாகனத்தின் RC புக் ஜெராக்ஸ் இருந்தது, அதில் வாகனத்தின் பதிவெண் TN 60 AZ 0300 என இருந்தது. மேற்படி வாகனத்தின் உரிமையாளர் முகமது இர்பான் எனவும் இருந்தது, அவர் கம்பம் வடக்கு காவல்நிலைய குற்ற எண்.179/2019 வழக்கில் எதிரி ஆவார். மேற்படி வழக்கு சம்மந்தமாக மேற்படி இருசக்கர வாகனத்தினை நாங்கள் தேடி வந்தோம். அன்றை தினமே 17.45 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்கள், என், காவலர் மணிமுத்து முன்னிலையில் மேற்படி வாகனத்தை அத்தாட்சியில் கைப்பற்றி, நிலையம் எடுத்து வந்தோம். அதில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் TN 60 AZ 0300 என்ற வாகனத்தை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். N 60 AZ 0300 என்ற வாகனத்தை கைப்பற்றிய அத்தாட்சியில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ. 11** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/திரு.P. காமராசு
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.